செ. வெ. **எண் – 482** நாள்–31.7.2007

<u>செய்தி வெளியீடு</u>

# அடையாறு பூங்கா அடிக்கல் நாட்டு விழா மழை காரணமாக ஆகஸ்டு 10ஆம் தேதி தள்ளி வைப்பு

**தமிழக அரசினால் அமைக்கப்படவுள்ள அடையாறு பூங்காவிற்கான அடிக்கல் நாட்டு விழா நாளை (1.8.2007) பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடலில் நடைபெறுவதாக இருந்தது. தற்போது சென்னை மாநகரில் மழை விட்டுவிட்டுப் பெய்வதாலும், தொடர்ந்து மழை நீடிக்கும் என வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் அடையாறு பூங்காவிற்கான அடிக்கல் நாட்டு விழா தேதி மாற்றப்பட்டு 10.8.2007 அன்று அதே இடத்தில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.**

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.